بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஒருவர் முஸ்லிமாக இருப்பதன் அழகு எப்போது வெளிப்படும் என்றால் அது அவரது ஈமானில் உறுதியாக இருக்கும் போது தான் அது வெளிப்படுகின்றது. மேலும் இஸ்லாத்தின் உண்மையை அவர் புரிந்திருக்க வேண்டும். தன்னைத்தானே முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்து விடுவதே ஈமான் ஆகும். மேலும் அவர் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப செயல்படுபவராகவும் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளின் மீது பார்வையை வைத்தவாறு தன்னை எல்லாவிதமான தீங்குகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதும் மற்றவர்களுக்கும் அமைதிக்கான ஏற்பாட்டை செய்வதும் தான் இஸ்லாமாகும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11.9.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

முஸ்லிம் என்று தன்னைப்பற்றி வாதம் செய்கின்ற ஒருவர் முஸ்லிமாக இருப்பதன் அழகு எப்போது வெளிப்படும் என்றால் அது அவரது ஈமானில் உறுதியாக இருக்கும் போது தான் அது வெளிப்படுகின்றது. மேலும் இஸ்லாத்தின் உண்மையை அவர் புரிந்திருக்க வேண்டும். தன்னைத்தானே முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்து விடுவதே ஈமான் ஆகும். மேலும் அவர் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப செயல்படுபவராகவும் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளின் மீது பார்வையை வைத்தவாறு தன்னை எல்லாவிதமான தீங்குகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதும் மற்றவர்களுக்கும் அமைதிக்கான ஏற்பாட்டை செய்வதும் தான் இஸ்லாமாகும். இதுவே இஸ்லாம் மற்றும் ஈமான் பற்றிய சுருக்கமான கருத்தாகும். முஸ்லிம் உலகம் இந்த விஷயத்தை புரிந்து கொண்டால் உலகில் அமைதியை நிலைநாட்டவும், சாந்தியை பரப்புவதற்குமுரிய எத்தகைய காட்சி தென்படும் என்றால் அது உலகத்தை சுவர்க்கமாக ஆக்கிவிடும்.

இந்த காலத்தில் இந்த உண்மையான ஈமானை உள்ளங்களில் நிலைபெறச் செய்வதற்கும் உண்மையான இஸ்லாத்தின் முன்மாதிரியை காட்டுவதற்கும் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். அவர்களுடன் தொடர்பு வைத்த பிறகு இது தான் நமது பொறுப்பாக இருக்கின்றது. அதாவது உண்மையான ஈமானை நிலைபெறச் செய்தவாறு இஸ்லாத்தின் சரியான முன்மாதிரியாக திகழ்ந்து இந்த பணியில் அன்னாருக்கு உதவி செய்பவராகவும், ஒத்துழைப்பு நல்குபவராகவும் நாம் இருக்க வேண்டும். உலகத்திற்கு ஈமானின் உண்மையை எடுத்துக் கூற வேண்டும். மேலும் சாந்தியை பரப்புபவர்களாக நாம் ஆக வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் தனது அமைப்பின் மூலமாக இந்த பணியை உலகில் செய்து கொண்டே இருக்கின்றது. ஆனால், இஸ்லாமிய போதனையின் முன்மாதிரியாக திகழ்வது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகவும் இருக்கின்றது. அதன் மூலம் நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புகளை நிறைவேற்றியவர்களாக ஆக வேண்டும். இன்றைய நாட்களில் துரதிஷ்டவசமாக முஸ்லிம் உலகில் நிலவுகின்ற குழப்பமானது இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தி இருக்கின்றது. அந்தோ இஸ்லாமிய நாடுகள் இந்த விஷயத்தை புரிய வேண்டும். அதாவது அவர்களது சுய பலன்களை மட்டும் கருத்தில் கொள்வது இஸ்லாத்திற்கு எந்த அளவு தீங்கு விளைவித்திருக்கின்றது என்பதை அவர்கள் புரிய வேண்டும். தீவிரவாதத்தை விரும்புகின்ற அமைப்புகளும், பிரிவுகளும் தோன்றுவதற்கு காரணம் ஒவ்வொரு மட்டத்திலும் சுய நோக்கங்களை கருத்தில் கொள்வது மட்டும் வலுவாக இருந்து வருகின்றது. நாடுகளின் அமைதி சீர்குலைந்து வருகின்றது. இவர்களுக்கும் அமைதி கிடைக்கவில்லை. மற்றவர்களுக்கும் இவர்களால் அமைதியை தர முடியவில்லை. அரசாங்கமும் குடிமக்களுடன் நீதியுடன் நடந்து கொள்ளவில்லை. அவ்வாறே குடிமக்களும் அரசாங்கத்திற்குரிய உரிமையை செலுத்தவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த இருவரது வரம்பு மீறுதல் பற்றி ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எதுவரை அரசாங்கம் தனது கடமைகளையும், குடிமக்கள் தமது கடமைகளையும் சரியாக செய்து வருவார்களோ அதுவரை அந்த நாட்டில் அமைதி நிலவும். ஆனால் எப்போதாவது குடிமக்கள் தரப்பிலிருந்தோ அல்லது அரசின் தரப்பிலிருந்தோ வரம்பு மீறும் நிலை இருந்தால் அப்போதே நாட்டிலிருந்து அமைதி சென்று விடும்.

துரதிஷ்டவசமாக இதுபோன்ற நிலையையே பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் நாம் பார்க்கின்றோம். பிறகு இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகளும் இதிலிருந்து தமது பலனையும் பெறுகின்றனர். ஒருபுறம் இந்த இருவருக்குமிடையில் சண்டைகளை அதிகரிக்கச் செய்வதில் இவர்கள் உதவுகின்றனர். மறுபுறம் தீவிரவாத பிரிவுகள் செய்கின்ற பணிகளை பிரசத்தி பெற வைத்து Press ம் Media வும் மிக அதிகமாக இதன் கவரேஜை தருகின்றது. இவ்வாறு கவரேஜ் கொடுத்து இஸ்லாத்திற்கு அவர்கள் அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர். நான் மீடியாக்களுக்கு வழங்கிய சில நேர்காணல்களில் கூறிய விஷயங்களில் இதையும் நான் கூறியிருந்தேன். அதாவது இஸ்லாத்திற்கு எதிராக வெறுப்பை பரப்புவதிலும் மேலும் இஸ்லாத்தை கடுமையை விரும்புகின்ற தீவிரவாத மதமாக எடுத்துக் கூறுவதிலும் Media களில் பணிபுகின்ற உங்களது கைகளும் இருக்கின்றன. Media நீதயுடன்

நடந்து கொள்ளவில்லை. ஏதாவதொரு பிரிவை அல்லது நாட்டை அல்லது தங்களைத் தானே முஸ்லிம் என்று கூறுகின்ற ஆட்சியாளர்களின் அரசியல் எண்ணங்களுக்கு மார்க்கத்தின் பெயரை வழங்கி இஸ்லாத்திற்கு நீங்கள் அவப்பெயரை ஏற்படுத்தித் தருகின்றீர்கள். பிறகு எந்த அளவு இதை பிரசித்தி பெற வைக்கின்றீர்கள் என்றால் நீங்கள் உலகில் வாழ்கின்ற மக்களது இஸ்லாம் தொடர்பான சிந்தனையையே மாற்றி விட்டீர்கள். அல்லது யாருக்கு இஸ்லாத்தை பற்றி தெரியாமல் இருக்கின்றதோ அவர்களது மூளைகளில் இஸ்லாத்தை பற்றி எத்ததைய விஷயங்களை பதிய வைத்து விட்டீர்கள் என்றால் இஸ்லாத்தின் பெயரை கேட்டதுமே அவர்களது முகம் மாறி விடுகின்றது. மேலும் எங்கு உங்களது சுய பலன்கள் இருக்கின்றதோ அங்கு செய்திகள் வெளிவராமல் அமுக்கி விடுகின்றீர்கள். ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான முஸ்லிம்கள் அமைதி பற்றியும் பேசுகின்றனர். அவர்களைப் பற்றி Media எதுவும் குறிப்பிடுவதில்லை. அல்லது அவர்கள் வரை Media சென்றடைவதில்லை. ஆனால் இதற்கு எதிராக செயல்படுபவர்களுக்கு Media உதவுகின்றது. எல்லாவற்றையும் விட எல்லோரையும் விட அதிகமாக அஹ்மதிய்யா ஜமாஅத் தான் அன்பு மற்றும் நேசத்தின் போதனையை பரப்புகின்றது. முழு உலகிலும் ஒரு ஈடுபாட்டுடன் இந்த பணியை அது செய்து வருகின்றது. இதன் காரணமாக அமைதியின் கொடியின் கீழ் அமைதியை பரப்புவதற்காகவும், சாந்தியை வழங்குவதற்காகவும் ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான மக்கள் ஜமாஅத்தில் இணைகின்றனர். அவர்கள் தொடர்பாக நாங்கள் உங்களுக்கு கூறினாலும் கூட அதன் பக்கம் நீங்கள் கவனம் செலுத்துவதில்லை.

இப்போது நான் அப்படிப்பட்ட மக்களின் சில உதாரணங்களை எடுத்துக் கூறுவேன். அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான முகத்தை கண்டனர். அதன் காரணமாக அவர்களது உள்ளங்களில் நல்ல தாக்கம் ஏற்பட்டது. இவர்களில் முஸ்லிம் அல்லாதவர்களும் அடங்குவர். முஸ்லிம்களும் அடங்குவர். பலரும் இஸ்லாத்தின் அழகான படத்தை பார்த்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். Media இஸ்லாம் தொடர்பான எதிர்மறையான தாக்கத்தை மட்டும் ஏற்படுத்தி எங்களது சிந்தனைகளில் பூட்டை போட்டு விட்டது என்று அவர்கள் கூறினர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த முயற்சியானது இவர்களது இந்த தவறான எண்ணங்களை அகற்றியது.

பெனினில் செரிவான் என்ற ஒரு சிறு ஜமாஅத் உள்ளது. அங்கு பள்ளிவாசல் துவக்க நிகழ்ச்சி இருந்தது. அங்குள்ள Apostle Church ன் பாதிரியார் இவ்வாறு கூறினார்:

இந்த நாள் எனது வாழ்நாளில் மிகவும் வியப்பிற்குரிய ஒரு நாளாகும். இன்று இங்கு முஸ்லிம்களும், கிறித்தவர்களும் ஒரே இடத்தில் அமர்ந்திருக்கின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத் தான் இந்த அனைவரையும் ஒன்றுசேர்த்துள்ளது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. எனவே அஹ்மதிய்யத்திற்கு நான் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிறகு நீதியை விரும்புகின்ற அரசியல்வாதிகளிடமும் ஜமாஅத்தின் இந்த பணிகளால் நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. இங்கு ஆண்டு மாநாட்டின் நாட்களிலும் உங்களுக்கு முன்னால் சிலர் தனது கருத்துகளை தெரிவித்தனர். உலகில் ஒவ்வொரு இடத்திலும் அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்துக் கூறுகின்ற இஸ்லாமிய போதனைகளுக்கும், அது செய்கின்ற பணிகளுக்கும் பாராட்டு தெரிவிக்கப்படுகின்றது. ஜமாஅத் செய்து வரும் தொண்டுகளை மக்கள் விரும்புகின்றனர். இது எவ்வளவு அழகிய போதனையாக இருக்கின்றது என்று அவர்கள் தமது கருத்துக்களையும் தெரிவிக்கின்றனர்.

பெனினின் Minister Of Transport கூறுகின்றார்கள்:

பெனினில் மனித குலத்திற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வரும் தொண்டுகளும், அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்துவற்கு அது செய்து வரும் முயற்சிகளும் பெனில் நாட்டில் முதலிடத்தில் இருக்கின்றது. அமைதி மற்றும் அன்பை பரப்பும் முயற்சியில் இந்த ஜமாஅத் செய்து வரும் தொண்டுகளுக்காக நான் அஹ்மதிய்யத்திற்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கபாபீரிலுள்ள நமது பிரச்சாரகர் எழுதுகின்றார்கள்:

சில நாட்களுக்கு முன்பு ஒரு யூத ஆசிரியர் பள்ளிக்கூட குழந்தைகளை நமது ஜமாஅத்திற்கு முன்பு அழைத்து வந்து ஜமாஅத்தைப் பற்றி அவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த ஆசிரியர் அநேகமாக அரபியும் தெரிந்திருந்தார். பள்ளிவாசலின் கதவிற்கு மேல் என்று எழுதப்பட்டிருந்தது. அந்த ஆசிரியர் இந்த சொற்றொடரின் சொற்பொருளை அந்த குழந்தைகளுக்கு எடுத்து وَمَنْ دَخَلَهُ كَانَ آمِنًا சொற்றொடரின் பொருள், எவர் இதில் நுழைவாரோ அவருக்கு சாந்தி கிடைக்கும் என்பதாகும் என்று கூறினார். பிறகு அவர் கூறினார்: இந்த சொற்களை எல்லா முஸ்லிம்களும் படிக்கின்றனர். இது திருக்குர்ஆனிலும் இருக்கின்றது. ஆனால் இந்த சொற்றொடரில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அதன் செயலளிவிலான முன்மாதிரியை அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் உள்ளவரிடம் தான் நீங்கள் பார்க்க முடியும் என்று அவர் அந்த குழந்தைகளிடம் கூறிக் கொண்டிருந்தார்.

(ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்) பிறகு அல்லாஹ் எவ்வாறு மக்களது கவனத்தை ஜமாஅத்தின் மீது திருப்புகின்றான் என்பதைப் பாருங்கள். பெனினில் மோயோனாமி என்ற ஓர் இடம் உள்ளது. அங்கு இணை வைப்பவர்கள் இருந்து வருகின்றனர். அங்குள்ள எல்லோருமே இணை வைப்பவர்கள் தான். அங்கு நமது பிரச்சாரகர் தப்லீக் செய்வதற்காக சென்றார். அவர்களுக்கு ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைத்துவிட்டு அந்த மக்களிடம் நீங்கள் ஏதாவது கேள்வி கேட்க விரும்பினால் கேளுங்கள் என்று கூறினார். அப்போது ஒரு பெரியவர் கூறினார்.

இதற்கு முன்பு வரை நான் இஸ்லாம் தொடர்பாக தீய எண்ணங்களை கொண்டிருந்தேன். இந்த பெரியவர் தொடர்ந்து கூறுகின்றார். இந்த இணை வைப்பவர்களிலிருந்து இஸ்லாத்தையும் அஹ்மதிய்யத்தையும் ஏற்றுக் கொள்கின்ற முதல் நபராக நான் இருக்கின்றேன். இதற்கு பிறகு இந்த கிராமத்திலிருந்து 40 நபர்கள் உண்மையான இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தில்

இணைந்தனர். மேலும் இந்த இணை வைப்பவர்களிலிருந்து வந்தவர்கள் மூலமாக இந்த கிராமத்தில் ஒரு புதிய ஜமாஅத் உருவானது. பிறகு சடங்கு சம்பிரதாயங்களை கூட அவர் உடனடியாக கைவிட்டு விட்டார். இந்த உடனடியான மாற்றம் அவரிடம் ஏற்பட்டது. ஒரு நாள் அவர் நமது முஅல்லிம் அவர்களிடம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு எனது உடலில் ஒரு புதிய ஆன்மா வந்து விட்டது. நான் எங்கிருந்தாலும் நான் எனது பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்தாலும் எப்போதும் எனது மனசாட்சி தொழுகைக்கான நேரம் வந்து விட்டது என்று கூறி என்னை தட்டி எழுப்புகின்றது. ஆக, தொழுகையை பேணுகின்ற இந்த விஷயம் அந்த மக்களிடம் கூட உருவாகி விட்டது. அந்த பெரியவர் கூறுகின்றார்: இதற்கு பிறகு நான் தொழுகைக்காக நிற்பேன். இதனால் எனது ஆன்மாவிற்கு நிம்மதியும் உடலுக்கு சுகமும் கிடைக்கின்றது. எனவே, நம்மில் எவர் தொழுவதில் சோம்பேறிகளாக இருக்கின்றோமோ அவர் இதனை நினைவில் கொள்ள வேண்டும். புதிதாக ஜமாஅத்திற்கு வருபவர்கள் இபாதத்தின் பக்கம் கவனம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மிகுந்த கவனத்துடன் தொழுகின்றனர்.

இன்று இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகவே உலகிற்கு கிடைக்கின்றது. அல்லாஹ் எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனையை உலகத்திற்கு எட்ட வைக்கின்றான். அதற்கு எவ்வாறு நல்ல தாக்கம் ஏற்படுகின்றது என்பதைப் பற்றி ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுகின்றேன். இந்த சம்பவம் கினிகனாகிரி நாட்டில் நடந்ததாகும். அங்கு நமது ஒரு அஹ்மதி சகோதரரான அபூபக்கர் சாஹிப் அவர்கள் தப்லீக் அமர்வுகளுக்கான ஏற்பாட்டை செய்தார்கள்.

முரப்பி சாஹிப் கூறுகின்றார்கள்:

நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது தூதுச் செய்தியை இந்த மக்களுக்கு எட்ட வைத்தோம். தப்லீக் நடந்து கொண்டிருந்த தருணத்தில் அங்கு ஒரு மவ்லவி வந்தார். தீங்கு விளைவிப்பதற்காக அங்கு அவர் வந்தார். சிறிது நேரம் வரை நான் கூறிய விஷயங்களை அவர் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்கு பிறகு மிகவும் கோபத்துடன் உங்களுக்கு இங்கு தப்லீக் செய்வதற்கான அனுமதி இல்லை என்று கூறினார். நான் போலீஸ் மூலமாக உங்களை நிறுத்துவேன் என்றும் கூறினார். அப்போது அங்குள்ள இளைஞர்கள் எழுந்து நின்று மிகவும் கோபத்துடன் அந்த மவ்லவியைப் பார்த்து நீங்களோ இதுவரை எங்களை வழிகெடுத்து வந்தீர்கள். எனவே உடனடியாக இங்கிருந்து சென்று விடுங்கள் என்று கூறினர். அதனால் அந்த மவ்லவி மிகவும் வெட்கமடைந்து அங்கிருந்து சென்றார். இதன் விளைவாக அங்கு கூடிய அந்த சபையில் 15 பேர் பைஅத் செய்தனர்.

பிறகு கினிகனாகரியின் ஒரு சம்பவம் இவ்வாறு வருகின்றது. நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வருகையின் நோக்கம் பற்றி எடுத்துக் கூறினோம். பிறகு இதுபற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். இறுதி காலத்தில் இந்த இந்த அடையாளங்கள் வெளிப்படும். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றுவார்கள் என்று முன்னறிவிப்பு பற்றி எடுத்துக் கூறினர். எவ்வாறிருப்பினும், மக்களுக்கு இதனால் நல்ல தாக்கம் ஏற்பட்டது. பிறகு அங்கிருந்த உள்ளூர் பிரச்சாரகரை அங்கேயே விட்டுவிட்டு மற்றவர்கள் திரும்பி விட்டனர். பிறகு அவர் தொடர்ந்து தப்லீக் செய்து வந்தார். அவர் கூறுகின்றார்? ஒரு வாரத்திற்குள் அந்த முழு கிராமமும், அங்கிருந்த பள்ளிவாசலின் இமாமும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர். அந்த பள்ளிவாசலும் நமக்கு கிடைத்தது. அது மட்டுமல்ல. அந்த கிராமத்திற்கு அருகிலுள்ள 4 அல்லது 5 கிராமத்தை சார்ந்த மக்களும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். மேலும் தொடர்புகள் இருந்து வருகின்றன. மக்கள் நிம்மதியிழந்த நிலையில் உண்மையான இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தில் இணைய தயாராக இருக்கின்றனர் என்ற செய்தி தொடர்ந்து எங்களுக்கு கிடைத்து வருகின்றது என்றும் இவர் கூறுகின்றார்.

ஆப்ரிக்காவில் ஓரிடத்தில் நமது Book Stall வைக்கப்பட்டது. திருக்குர்ஆனின் கண்காட்சியும் வைக்கப்பட்டிருந்தது. இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் Book Stall க்கு வந்திருந்தனர். அவர்களிடம் அஹ்மதிய்யா ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைத்து இமாம் மஹ்தி வந்து விட்டார்கள் என்று கூறப்பட்டது. அந்த இளைஞர்களுக்கு பிரெஞ்ச் மொழியில் சதாகத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்ற நூல் வழங்கப்பட்டது. பிறகு இறுதி காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்படும் அவல நிலை தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்திருந்த முன்னறிவிப்புகள் அடங்கிய நபிமொழிகள் கூறப்பட்டது. மஸீஹின் இரண்டாவது வருகை பற்றி கூறப்பட்டது. உண்மை இஸ்லாமிய அஹ்மதிய்யத் பற்றி கூறப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த உண்மையான இஸ்லாம் இதுதான். இன்றைய முஸ்லிம்கள் அதன் வடிவத்தை சீர்குலைத்து விட்டனர். இஸ்லாம் என்றால் என்ன?அதில் அன்பு, சாந்தி, சமாதானத்தைப் பற்றிய போதனைகள் தான் இருக்கின்றன என்று எடுத்துக் கூறப்பட்டது. இதனை கேட்ட அந்த இரண்டு இளைஞர்களும் நாங்கள் கொள்கை அடிப்படையில் நிச்சமயாக முஸ்லிம்களாக தான் இருக்கின்றோம். ஆனால் முஸ்லிம்களின் காட்டுமிராண்டித்தனம் மற்றும் தீவிரவாதிகளின் செயல்பாடுகளின் காரணமாக எந்த அளவுக்கு நாங்கள் துன்பத்திற்கு காரணமாகி விட்டோம் என்றால் நாங்கள் கிறித்தவர்களாக மாற இருந்தோம். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத் கூறக்கூடிய விஷயங்களைக் கேட்ட பிறகு இஸ்லாம் இந்த முல்லாக்கள் எடுத்துக் கூறுவது போன்ற ஒன்றல்ல என்று அவர்கள கூறினர்.

முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

நீங்கள் எங்களை கிறித்தவர்களாக ஆவதிலிருந்தும் காப்பாற்றி இருக்கின்றீர்கள். இஸ்லாத்தை விட்டும் விலகுவதிலிருந்தும் எங்களை காப்பாற்றியுள்ளீர்கள். எனவே நாங்கள் அதற்காக நன்றி தெரிவிக்கின்றோம் என்று அந்த இளைஞர்கள் கூறினர்.

முஸ்லிம் அல்லாதவர்களின் உள்ளங்களில் கூட உண்மையான இஸ்லாத்தை பார்த்த பிறகு அதை பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கின்றது. அவ்விஷயத்தில் அவர்கள் நம்முடன் இணைந்து செயல்படுகின்றனர். ஜப்பானின் முபல்லிக் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

புத்த மதத்தை சார்ந்த ஒரு ஜப்பானியர் நமது Stall ற்கு வந்திருந்தார். இஸ்லாம் தொடர்பாக அவருக்கு மிக குறைவாகத் தான் தெரியும் என்று அவர் கூறினார். அவருக்கு இஸ்லாத்தை அறிமுகம் செய்து வைத்து மற்ற மதங்களைப் பற்றிய இஸ்லாமிய போதனைகளின் உதாரணங்களை திருக்குர்ஆனின் வசனங்களிலிருந்து நாங்கள் எடுத்துக் காட்டிய பிறகு அவர்கள் எங்களுக்கு நன்றி தெரிவித்தது மட்டுமல்லாமல் இந்த அழகிய போதனையானது உலகிலுள்ளவர்களுக்கு எடுத்துக்கூற தகுதியுள்ளவையாகும். இதன் மூலம் இஸ்லாத்தை பற்றிய தவறான எண்ணங்களை போக்க முடியும் என்று வஅர் கூறினார். ஒரு நாள் அவர் நமது Stall க்கு வந்தார். காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரை அவர் புத்த மதத்தை சார்ந்தவராக இருந்தும் கூட உரத்த குரலில் இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்பதை எடுத்துக் கூறி வந்தார். மேலும் மக்களுக்கு ஃபோல்டர்களை விநியோகம் செய்தும் வந்தார்.

இவ்வாறே இந்தியாவிலுள்ள கர்நாடகா மாநிலத்தில் கதக் என்ற இடத்தில் Book Stall வைக்கப்பட்டது. இந்த Book Stall க்கு முஸ்லிம் அல்லாத ஒரு நண்பர் வந்தார். பிறகு அவர் இவ்வாறு கூறினார்:

இதற்கு முன்னரும் நான் பல Book Stall ஐ பார்த்துள்ளேன். ஆனால் அமைதி மற்றும் சாந்தியின் தூதுச் செய்தியை வழங்குகின்ற, இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எட்ட வைக்கின்ற இத்தகைய மக்களை நான் இன்று வரை கண்டதில்லை. அவர் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகி நமது Book Stall லிருந்து பல நூல்களையும் வாங்கிச் சென்றுள்ளார்.

லக்சம்பர்க் என்ற நகரத்தில் ஒரு கண்காட்சி நடந்த சமயத்தில் ஜமாஅத் தரப்பிலிருந்து அங்கு ஒரு Book Stall வைக்கப்பட்டிருந்தது. கண்காட்சி நடந்த போது நகரத்தின் மேயரும் Stall க்கு வந்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த பல்வேறு நூல்களைப் பார்த்தார். லக்சம்பர்க் ஜமாஅத்தின் தலைவர் அவர்கள் சுருக்கமான முறையில் இவர்களுக்கு ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைத்தார்கள். மேலும் ஒரு நூலையும் இவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார். மேயர் உங்களது இயக்கம் மிகச்சிறந்த பணியை செய்து வருகின்றது என்று கூறினார். இஸ்லாத்தின் இந்த அழகிய படத்தை மிக விரைவாக நீங்கள் உலகில் பரப்ப வேண்டும் என்றும் கூறினார்.

உள்ளம் உடைந்து போன ஒரு புதிய முஸ்லிம் தொடர்பான சம்பவத்தையும் நான் கூறுகிறேன். ஹாலன்டின் அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பிலால் சாஹிப் என்ற ஒரு டச் முஸ்லிம் இருந்தார். முஸ்லிம்களின் அவல நிலையை பார்த்து மிகவும் உள்ளம் உடைந்து போனார். அவர் கூறுகிறார். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகளினால் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகி இருக்கின்றேன். அல்லாஹ் தஆலா எனக்கு அஹ்மதிய்யத்தின் உண்மையை வெளிப்படுத்திக் காட்டினான். எனக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இப்போது நான் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றேன். ஆன்மீக முன்னேற்றம் கிடைத்திருப்பதை உணர்கின்றேன். முன்னர் எனக்கிருந்த நிம்மதியின்மையும் இப்போது முடிந்து விட்டது.

பிறகு திருக்குர்ஆனின் போதனைகள் மற்றவர்கள் மீது எத்ததைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றியும் கூறுகின்றேன். கனடாவிலிருந்து நமது தாயி இலல்லாஹ் நண்பர் ஒருவர் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

நாங்கள் ஒரு தப்லீக் Book Stall வைத்திருந்தோம். ஒரு ஆங்கிலேய தம்பதியினர் Stall க்கு வந்திருந்தனர். அவரது மனைவி மிகவும் கிறித்தவத்தில் பிடிப்புள்ளவராக இருந்தார். அவர் தனது கணவரிடம் திருக்குர்ஆனை வாங்கக்கூடாது என்று கூறி வந்தார். அந்த பெண்ணின் கணவர், திருக்குர்ஆனை எனது மனைவி வாங்குவதற்கு தயாராகும் வகையில் இதைப்பற்றிய விஷயங்களை நீங்கள் எனது மனைவிக்கு எடுத்துக் கூறுங்கள் என்று என்னிடம் கூறினார். அப்போது நமது அஹ்மதி நண்பர் அவர்களிடம் திருக்குர்ஆனில் ஒரு அதிகாரம் இருக்கின்றது. அதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றியும், அவர்களது தாயாரைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவர்களைப் பற்றி எத்தகைய விவரங்கள் அதில் கூறப்பட்டுள்ளது என்றால் உங்களுக்கு அவை பைபிளிலும் கூட கிடைக்காது என்று கூறினார். மேலும் திருக்குர்ஆனில் அந்த அதிகாரம் இடம் பெற்றுள்ள இடத்தையும் எடுத்து அவர் முன்னால் வைத்தார். திருக்குர்ஆனின் மொழியாக்கத்தை அவரது மனைவி படித்தார். சிறிது நேரம் படித்த பிறகு உண்மையிலேயே இது உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஒரு நூலாகும். Media நமக்கு திருக்குர்ஆன் வெறுப்பால் நிறைந்திருக்கும் ஒரு நூல் என்றே கூறியது. ஆனால் இந்த நூலிலோ ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பற்றியும், அவரது தாயார் பற்றியும் மிகவும் அன்புடன் எடுத்துக் கூறுப்பட்டுள்ளது என்று கூறினார். பிறகு அவர் திருக்குர்ஆனை வாங்கினார். சில வாரங்கள் கழிந்த பிறகு அவர்கள் நமது Stall ஐ கடந்து சென்ற சமயத்தில் எங்களுக்கு நன்றி தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார். நாங்கள் திருக்குர்ஆனை படித்தோம். Meida வில் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தொடர்பாக பரப்பப்படுகின்ற வெறுப்பான விஷயங்களால் ஏற்படுகின்ற தவறான எண்ணங்கள் அனைத்துமே ஒருவர் திருக்குர்ஆனை படிக்கும் போது அகன்று விடும் என்று கூறினார்.

பெனினில் ஒரு Book Stall வைக்கப்பட்டிருந்த சமயத்தில் ஒரு பள்ளிக்கூட ஆசிரியை அங்கு வந்திருந்தார்கள். ஜமாஅத்தின் அன்பு மற்றும் அமைதியின் போதனைகளை படித்து விட்டு எனது மாணவர்களுக்கும் நூல்களை தாருங்கள் என்று கேட்டார். அவர்களும் இந்த நூல்களை படிக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றேன். அதன் மூலமாக சமுதாயம் அமைதி மற்றும் அன்பால் நிரம்பி விட வேண்டும். நல்ல இயல்புகள்ள முஸ்லிம்களும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைப்பை பார்த்து அது முற்றிலும் இஸ்லாமிய அமைப்பாக இருப்பதை கண்டு நல்ல தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. பிறகு அதுவே அவர்களுக்கு நேர்வழி கிடைப்பதற்கும் காரணமாக இருந்திருக்கின்றது.

பொர்கினோ ஃபாசோவின் முரப்பி எழுதுகின்றார்கள்:

சிலாகுகு என்ற ஓர் இடம் உள்ளது. அங்கு தப்லீகிற்காக சென்றிருந்தோம். மக்கள் நல்ல முறையில் எங்களை வரவேற்றனர்.

எல்லா ஆண்களும் பெண்களும் தப்லீக்கை கேட்பதற்காக ஒன்று திரண்டனர். கூறுகின்றார். ஒரு நண்பரான ஸகரிய்யா சாஹிப் என்னிடம் வந்தார். அவர் கூறினார். நான் சிறிது காலம் முன்பு ஒரு கனவு பார்த்தேன். நான் சந்தா கொடுத்துக் கொண்டிருக்கின்றேன். அப்போது பைத்துல் மால் இருக்கின்ற அத்தகைய இஸ்லாமிய பிரிவிற்கு சந்தாவை வழங்குங்கள் என்று ஒரு குரல் எனக்கு கேட்டது. நான் நீண்ட காலமாக இத்தகைய இஸ்லாமிய பிரிவை தேடிக் கொண்டிருந்தேன். இப்போது முரப்பி சாஹிப் அவர்கள் ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பு பற்றி கூறிய போது நான் கனவில் கேட்ட அந்த சொற்களுக்கான விளக்கம் எனக்கு கிடைத்து விட்டது என்று கூறிவிட்டு அப்போதே 10,000 France Shifa வை அவர் சந்தாவாக செலுத்தினார். அவர்கள் கனவிலும் இதைப் பற்றி கேட்டுவிட்டு முறையாக சந்தாவிற்கான ரஸீதை வழங்குவதற்கென்று ரஸீது Book இருப்பதையும் எல்லா விஷயங்களின் Record ம் வைக்கப்படுகின்றது என்பதையும் பார்த்து மிகுந்த தாக்கத்திற்கு ஆளானார். அல்லாஹ்வின் அருளால் இதற்கு பிறகு இந்த கிராமத்தில் 282 பேர் பைஅத் செய்தனர். இந்த எல்லோருமே முறையாக ஜமாஅத்தின் சந்தா அமைப்பில் இணைந்து விட்டனர்.

கோப்டேமாலாவில் ஃபிளேயர்ஸ் விநியோகம் செய்யப்பட்ட போது ஒரு இளைஞரான யூசுஃப் சாஹிபிடம் தொடர்பு ஏற்பட்டது. அவர் Mission House ற்கு வந்தார். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். இவர்கள் சிறிது காலத்திற்கு முன்பு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர் கூறுகின்றார்:

ஜமாஅத் அல்லாத மற்ற பிரிவுகளின் பள்ளிவாசலுக்கு சென்ற போது உள்ளத்திற்கு நிம்மதி கிடைக்கவில்லை. அங்குள்ளவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவர்களுக்கிடையில் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கிடையில் வெறுப்பும் இருக்கின்றது. ஒரு நாள் துஆ செய்து விட்டு தூங்கினேன். அப்போது கனவில் ஒரு பெரியவரை கண்டேன். அவர் மிகவும் ஆன்மீகமான தோற்றத்தை கொண்டவராக இருந்தார். ஒரு பாதையில் சாம்பல் அதிகமாக இருந்தது. அந்த பெரியவர் எனக்கு முன்னால் சென்றவாறு சைகை மூலமாக எனக்கு பின்னால் வாருங்கள் என்று என்னை அழைத்தார்கள். அந்த பெரியவர் சென்றதனால் சாம்பல் இருந்த அந்த வழிப்பாதை தூய்மையடைந்து கொண்டே இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புகைப்படம் அவருக்கு காட்டப்பட்ட போது இந்த பெரியவர் தான் கனவில் எனக்கு வழிகாட்டினார் என்று அவர் கூறினார். அல்லாஹ்வின் அருளால் இந்த விஷயம் அவரது ஈமானை மேலும் வலுப்படுத்தியது.

பிரான்ஸின்ன் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

புதிதாக பைஅத் செய்த அஹ்மதியான கமால் சாஹிப் கூறினார்கள்: நான் பல வருடங்களாக சம்பிரதாய முஸ்லிமாக இருந்து வருகின்றேன். ஆலிம்கள் தரப்பிலிருந்தும் திருக்குர்ஆனுக்கு வழங்கப்படும் விளக்க உரைகள் எனக்கு திருப்தி அளிக்காமல் இருந்து வந்தது. ஒரு நாள் நான் எனது மச்சானிடம் ஒரு மார்க்க விஷயம் தொடர்பாக பேசிக் கொண்டிந்தேன். அப்போது அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி என்னிடம் கூறினார்கள். மேலும் என்னிடம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது தஃப்ஸீரை படிக்கும்படி கூறினார்கள். நான் தஃஸீரை படித்த போது இவ்வளவு எளிமையான, தெளிவான தஃப்ஸீரை கடந்த 1400 வருடங்களாக வேறு எவரும் ஏன் எழுதவில்லை என்று நினைத்து வியப்பில் ஆழ்ந்து விட்டேன். இதற்கு பிறகு என்னுடைய மச்சான் எனக்கு M.T.A பற்றி கூறினார்கள். இணைய தளத்துடன் எனக்கு தொடர்பை ஏற்படுத்தினார். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது பல நூல்களையும் நான் படித்தேன். பல நிகழ்ச்சிகளையும் பார்த்தேன். அப்போது எனது கைகளில் ஒரு கருவூலம் கிடைத்து விட்டது போன்று எனக்கு தேன்றியது. எனது ஆன்மாவிற்கு விடுதலை கிடைத்த விட்டது. எல்லா சந்தேகங்களும் அகன்றது. உண்மையான இஸ்லாம் பற்றி எனக்கு தெரிய வந்தது. அதற்கு பிறகு அவர் பைஅத் செய்த விட்டார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் ஜமாஅத் மூலமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடையும் போது அது அன்பு, அமைதி மற்றும் சாந்தியின் தூதுச் செய்தியாக இருப்பதைப் பார்க்கின்ற நல்ல இயல்புள்ள மக்கள் அதை ஏற்றுக் கொள்கின்றனர்.

கொய்டோமாலா முபல்லிக் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

Leaf Leat விநியோகம் செய்ததன் காரணமாக 91 நபர்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒரு பாதிரியாரும் அடங்குவார். இவர் 33 வருடங்களாக கத்தோலிக்க சர்ச்சுடனும், 5 வருடங்களாக பிராட்டஸ்டன்ஸ் சர்ச்சுடனும் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறே இன்னொரு நபரும் பைஅத் செய்துள்ளார். அவர் Municipality ல் நீதிபதியாக தனது கடமையை நிறைவேற்றி வருகிறார். அவர்கள் பகுதியில் தப்லீக் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாட்டையும் இவர்கள் செய்திருந்தனர். விளக்கமாக இஸ்லாமிய போதனைகள் அங்கு எடுத்துக் கூறப்பட்டன. அஹ்மதிய்யத் பற்றி தப்லீக் செய்யப்பட்டது. கேள்வி பதில் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த சபை 7 மணிநேரம் நடந்தது. இந்த அமர்வு முடிவதற்கு முன்னதாக அதில் கலந்து கொண்ட அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவிப்பு செய்தனர். இவர்களின் எண்ணிக்கை 89 ஆகும். இவர்களில் ஆண்கள், பெண்கள் அனைவரும் அடங்குவர்.

எனவே, இது இஸ்லாத்தின் செடியாகும். அல்லாஹ்வால் நடப்பட்ட செடியாகும். மேலும் இந்த காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப இதற்கு நீர் பாய்ச்சுவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். கியாமத் வரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அருளைப் பெற்றவாறு அவர்களிடமிருந்து கிடைக்கும் அருளின் காரணமாக அல்லாஹ் இதற்கு தண்ணீரை கிடைக்கும்படி செய்வான். இன்ஷா அல்லாஹ். எப்போதும் இந்த செடி செழிப்புடன் இருந்து வரும். உலகத்தை அல்லாஹ்வின் திருப்தியை பெறும் வகையில் வழிநடத்துவதற்காக, சாந்தியையும், அன்பையும் பரப்புவதற்காக நாம் செய்யும் முயற்சிகள் தொடர்பான சில சம்பவங்களை எடுத்துக் கூறினேன். நமது ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய ஆயிரக்கணக்கான சம்பவங்கள் நம்முன்னால் வந்து

கொண்டிருக்கின்றன. அல்லாஹ் எவ்வாறு நெஞ்சங்களை திறக்கின்றான். மற்றவர்களது நாவுகளிலிருந்து எவ்வாறு நமக்கு சாதகமாக விஷயங்களை கூற வைக்கின்றான் என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. ஒருவர் ஆப்ரிக்காவில் இருக்கின்றார். இன்னொருவர் அரபு நாட்டிலுள்ளவர். ஒருவர் ஐரோப்பாவில் உள்ளவர். இன்னொருவர் South Africa வில் உள்ளவர். இவ்வாறிருந்தும் இவர்கள் எல்லோர் மீதும் ஒரே விதமான தாக்கமே ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், உலகளாவிய போதனையும் ஒன்று மட்டுமே ஆகும். அது இஸ்லாத்தின் போதனையாகும். நீதியை விரும்புகின்ற ஒவ்வொருவரும் அவர் உடனடியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் உலகில் அமைதி ஏற்படுவதற்கு இஸ்லாம் தான் உத்தரவாதத்தை வழங்குகின்றது என்று கூறும் நிர்பந்தத்திற்காளாகின்றார். நீதியை விரும்புகின்ற எவரும் சுயநலமுள்ள முஸ்லிம் தலைவர்கள் அல்லது சுய பலன்களை விரும்புகின்ற, தீங்கு விளைவிப்பதை விரும்புகின்ற பிரிவுகளின் செயல்களை பார்த்து அதனை இஸ்லாமிய போதனையின் ஒரு பகுதியாக ஒருபோதும் கருத மாட்டார்கள். எவரிடம் நீதி இல்லையோ அவர் தான் இத்தகைய கருத்துக்களை கூறுவார். இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகள் இஸ்லாத்திற்கு எதிராக எவ்வளவு தான் எதிர்மறையான விஷயங்களை கூறினாலும் இஸ்லாம் தான் உலகிற்கு அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கான வழிகளை காட்ட இருக்கின்றது. அது தான் அவர்களுக்கு அமைதியையும், சாந்தியையும் வழங்க இருக்கின்றது. இன்றில்லை என்றாலும் நாளை இஸ்லாம் தான் உலகின் அமைதி மற்றும் சாந்திக்கு உத்தரவாதமாக திகழ்கின்றது என்பதை உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். அல்லாஹ் நமக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. நாமும் இந்த வெற்றியின் ஒரு பகுதியாக இருப்போமாக. அல்லாஹ்வின் அருள்களை பல மடங்கு அதிகமாக பார்க்கக்கூடியவர்களாகவும் நாம் ஆவோமாக. மேலும் நமது செயல்களை இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்பவர்களாகவும் நாம் இருப்போமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 11.9.2015
Tamil Translation : Moulavi. M. Rafique Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516